**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.209/2018**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.03.2024 | தந்தை பெயர்: | கொளஞ்சியப்பன் |
| பெயர்: | ராஜதுரை<br>(PW-2 Chief ) | வயது : | 31/2024 |
| கிராமம்: | | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர், கள்ளகுறிச்சி தாலுக்கா,வேங்கைவாடி | | |

**முதல் விசாரணை : 11.03.2024.**

நான் இவ்வழக்கின் நீதிமன்றத்திலுருந்து கிடைக்கபெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்சமயம் கள்ளகுறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம் வேங்கைவாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் சீர்காழி வட்டம், மாதானம் கிராமத்தில் 16.02.2017 முதல் 29.08.2019 வரை கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். எண்ணிடம் காட்டப்படும் சிட்டா மற்றும் அடங்கல்கள் என்னால் வழங்கப்பட்டதா என்றால் ஆமாம். எந்த புல எண்ணுக்ககா வழங்கப்பட்டுள்ளது என்றால் புல எண்.269–க்கு பசலி ஆண்டு 1426, 1427 மற்றும் 1428 ஆண்டுகளுக்கு சிட்டா அடங்கள் வழங்கியுள்ளேன் **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.8 எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் நேரடியாக ஸ்தல விசாரணை செய்து சாகுபடி செய்கிறார்களா என்பதை ஆய்வு செய்து சான்று வழங்கியுள்ளேன். வா.சா.ஆ.8 ஆனது குத்தகை தாரர் என்ற அடிப்படையில் சாகுபடி செய்து வந்ததால் சான்று வழங்கியுள்ளேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.